**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**முன்னிலை திருமதி.M.முருகானந்தி, B.Sc., B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, வேடசந்தூர்**
2021ம் ஆண்டு நவம்பர் திங்கள் 29ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.97/2016**
CNR.No.TNDG16-001847-2019

1. ஆண்டியம்மாள் (இறப்பு) (Amended as per order in I.A.446/2021 dated 07.10.2021)
2. கோட்டைகட்டி
3. பெருமாள்
4. சின்னம்மாள் ... வாதிகள்

/எதிர்/

1. வெள்ளையனம்பலம் (இறப்பு) (Amended as per order in I.A.446/2021 dated 07.10.2021)
2. சின்னம்மாள்
3. பொன்னன் (இறப்பு) (Amended as per order in I.A.446/2021 dated 07.10.2021)
4. மூக்கன்
5. சின்னான்அம்பலம் (இறப்பு) (Amended as per order in I.A.446/2021 dated 07.10.2021)
6. சங்கனம்பலம்
7. கோட்டைகட்டி
8. தனலெட்சுமி
9. கல்யாணசுந்தரம்
10. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்
11. வட்டாட்சியர், வேடசந்தூர்
12. சார்பதிவாளர், வடமதுரை ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 20.09.2016ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 23.11.2021ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சீனி அவர்கள் முன்னிலையாகியும், 1,3 மற்றும் 5ம் பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 2, 4, 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் முன்னிலையாகததால் ஒருதரப்பாக்கப்பட்டும், 10 முதல் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் அரசுதரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், இருதரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று (29.11.2021) இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.....

**தீர்ப்புரை**

தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தின் சுவாதீனத்தை 8,9 பிரதிவாதிகள் வில்லங்கமின்றி வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், 07.07.1976 மற்றும் 15.09.1981 ஆகிய தேதிகளிட்ட கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரமும், 10.07.2009ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்டின் 5-வது லக்க சொத்து சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என விளம்புகை பரிகாரம் செலவுத்தொகையுடன் வழங்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்**

வாதிகள் தரப்பில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அதில், தாவா சொத்துக்கள் ஆதியில் பொன்னம்பலத்திற்கு பூர்வீகப்பாத்தியப்பட்டதில், பொன்னம்பலத்திற்கு நில உடைமை பதிவேடு வழங்கப்பட்டுள்ளதாகவும், 08.03.2004ம் தேதியன்று பொன்னம்பலம் தனது மனைவி, மக்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 08.05.2004ம் தேதியன்று 2,7 பிரதிவாதிகள் தாவா சொத்தில் இடைஞ்சல் செய்ததாகவும், தாவா சொத்திற்கு வில்லங்க சான்று போட்டு பார்த்ததில் 2,7 பிரதிவாதிகள், 1, 3 முதல் 6 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்தில் கீழ்புறம் 1 ஏக்கர் 57 செண்ட் நிலத்தை 07.07.1976ம் தேதிய கிரையஆவணத்தை 1ம் பிரதிவாதி மீது ஏற்படுத்திக் கொண்டதாகவும், தாவா சொத்தில் மேல்புறம் 1 ஏக்கர் 27 செண்ட் நிலத்தை 7ம் பிரதிவாதிக்கு 3 முதல் 6 பிரதிவாதிகள் மோசாடியாக கிரையஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டதாகவும், 2 மற்றும் 7ம் பிரதிவாதிகளின் மக்களான தனலெட்சுமி மற்றும் கல்யாணசுந்தரத்திற்கு 10.07.2009ம் தேதிய மோசடியான கிரையஆவணம் உற்பத்தி செய்துள்ளதாகவும், தாவா சொத்துக்களை பொறுத்து மேற்படியார்களுக்கு எந்த உரிமையும் இல்லையென்றும், 25.04.2016ம் தேதியன்று ஊர் பெரியவர்கள் முன் கேட்டதில் கொலைமிரட்டல் விடுத்ததாகவும், எனவே, தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தின் சுவாதீனத்தை 8,9 பிரதிவாதிகள் வில்லங்கமின்றி வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு 07.07.1976ம் தேதியில் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணமும், 3 முதல் 6 பிரதிவாதிகள்

7ம் பிரதிவாதிக்கு 15.09.1981ம் தேதியன்று எழுதிக் கொடுத்த கிரைய ஆவணமும், 2 மற்றும் 7 பிரதிவாதிகள், 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு 10.07.2009ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சொத்துவிபரத்தில் கண்ட 5ம் லக்க சொத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் செலவுத்தொகையுடன் வழங்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 12ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்**

(12ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை 10,11 பிரதிவாதிகள் ஏற்றுக் கொள்கிறார்கள்)

12ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அதில், பிரதிவாதியால் ஒத்துக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதிகளே நிரூபணம் செய்யவேண்டுமெனவும், வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் 07.07.1976, 15.09.1981 மற்றும் 10.07.2009ம் தேதிகளிலிட்ட ஆவணங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 1 முதல் 9 பிரதிவாதிகள் தொடர்புபட்ட சொத்துப்பிரச்சனை என்றும், 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரப்பட்டுள்ள பரிகாரங்களை பொறுத்து நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு 10 முதல் 12 பிரதிவாதிகள் செயல்பட தயாராக இருப்பதாகவும், எனவே, வாதிகளின் தாவா பிராது பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

**4.இவ்வழக்கில் 30.10.2019ம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன-**

1. Whether the plaintiff is entitled for the relief of declaration and recovery of possession against 8th and 9th defendant?
2. Whether the plaintiff is entitled of declaration the saledeed dated 07.07.1979 illegal as prayed for?
3. Whether the plaintiff is entitled of declaration the saledeed dated 15.09.1981 illegal as prayed for?
4. Whether the plaintiff is entitled of declaration the settlement deed dated 10.07.2009 illegal as prayed for?
5. To what other relief as prayed for?

**5**. வாதிகள் தரப்பில் சின்னம்மாள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6.**<u>**தீர்வு**</u>

**எழுவினா 1 முதல் 4 க்கான தீர்வு**

இருதரப்பும் கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. தாவா சொத்து பொன்னம்பலத்திற்கு பூர்வீக பாத்தியப்பட்டது என சொல்லி, அதற்கு ஆதரவாக பொன்னம்பலம் பெயரில் உள்ள நிலஉடைமை பதிவேடு வா.சா.ஆ.1 சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, நிலஉடைமை பதிவேடான வா.சா.ஆ.1 சான்றாவணம் பட்டா எண்.1432-க்கு சர்வே எண்.370ல் ஏக்கர் 6 செண்ட் 27 என குறிப்பிடப்பட்டு, பொன்னம்பலம் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**7.** இந்நிலையில், தாவா சொத்தை வாதிகள் வகையறா அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதை காட்ட, 1389 பசலிக்கான அடங்கல் வா.சா.ஆ.2 சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 சான்றாவணத்தில் பட்டா எண்.1432 சர்வே எண்.370க்கு ஏக்கர் 6 செண்ட் 27 என குறிப்பிடப்பட்டு, 15.11.2011ம் தேதி வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. மேற்படி, பொன்னம்பலம் 08.03.2004ம் தேதி இறந்து விட்டார் என்பதும், பொன்னம்பலத்தின் வாரிசுகள் தான் வாதிகள் என்பதை காட்டவும், வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**8.** இச்சூழ்நிலையில், 07.07.1976ம் தேதியிட்ட வா.சா.ஆ.7 சான்றாவணத்தின் படி சர்வே எண்.370ல் ஏக்கர் 6 செண்ட் 27ல் கீழ்புறம் ஏக்கர் 1 செண்ட் 57யை வெள்ளையனம்பலம், சின்னம்மாளுக்கு கிரையம் கொடுத்ததாகவும், 15.09.1981ம் தேதியிட்ட வா.சா.ஆ.8 சான்றாவணத்தின் படி, சர்வே எண்.370ல் ஏக்கர் 6 செண்ட் 27ல் மேல்புறம் ஏக்கர் 6 செண்ட் 70யை பொன்னான், மூக்கன், சின்னன்அம்பலம், சங்கன்அம்பலம் ஆகியோர்கள் கோட்டைகட்டிக்கு கிரையம் செய்து கொடுத்தாகவும், 10.07.2009ம் தேதியிட்ட வா.சா.ஆ.9 சான்றாவணத்தின் படி சர்வே எண்.370ல் ஏக்கர் 6 செண்ட் 27யை

கோட்டைகட்டிஅம்பலம், அவரது மனைவி சின்னம்மாளும், தனலெட்சுமிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி விபரம் வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.10 சான்றாவணங்களின் அடிப்படையில் வாதிக்கு தெரியவருவதால், உரிமையில்லாத நபர்களின் மூலம் எழுதப்பட்ட வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களை செல்லத்தக்கதல்ல என்பதாக வாதிகளால் பரிகாரம் கோரப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**9.** மேற்படி வாதிகளால் கோரப்பட்டுள்ள பரிகாரம், வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து கண்டறிய வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சான்றாவணங்களின் படி வாதிகளுக்கு தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டு, அதன் அடிப்படையில் தாவா சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி, வா.சா.ஆ.1 சான்றாவணம் எந்த வருடம் வழங்கப்பட்டது என்பதற்கான எந்த மேற்குறிப்பும் இல்லாத நிலையில், 15.11.2011ம் வருடம் வா.சா.ஆ.2 சான்றாவணம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்ற நிலையில், வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சான்றாவணங்களுக்கு முந்தைய ஆவணங்களாக உள்ளதாக தெரியவருகிறது. மேலும், தாவா சொத்தை வாதிகள் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்களாக குறிப்பிட்டு காட்டப்பட்டிருந்த போதிலும், அது குறித்த ஆவணங்கள் சமர்பிக்கப்படவில்லை என்றே தெரியவருகிறது.

**10.** மேற்கண்ட நிலையில், பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள பொருண்மைகள் உண்மையானவையல்ல என்ற நிலையில், அதை ஆட்சேபணை செய்ய வேண்டிய பொறுப்பு பிரதிவாதிகளுக்கு உள்ள சூழ்நிலையில், வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள பொருண்மைகளை மறுத்து, எதிர்வாதம் எடுக்காத நிலையில், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சான்றாவணங்களின் படி தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றே இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கிறது. மேலும், 10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில், அதன் படி நடக்க தயாராக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**11.** இந்நிலையில், வாதிகள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து பிராது நகல் மூலம் 1 முதல் 9 பிரதிவாதிகள் தெரிந்து கொண்டு அது குறித்து இல்லை என்று நிரூபணம் செய்ய பிரதிவாதிகள் முன்னிலையாகவில்லை என்பதை வைத்து பார்க்கும் போதும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் தொடர்பான சங்கதிகளை மறுத்தலிக்கும் விதமாக 1 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையோ, சான்றாவணங்களையோ தாக்கல் செய்யப்படாமல் உள்ளதை வைத்து பார்க்கும்போதும், 10 முதல் 12ம் பிரதிவாதிகளை பொறுத்து நீதிமன்ற உத்தரவை ஏற்றுக் கொள்வதாக சொல்லியிருப்பதை வைத்து பார்க்கும் போதும், மேற்படி வாதிகள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள், வா.சா.1 தனது வாய்மொழி சாட்சியத்துடனும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களின் அடிப்படையிலும் வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** மேற்கண்ட வழக்கின் சூழ்நிலை மற்றும் பொருண்மைகளின் அடிப்படையில், வாதிகள் தன்னுடைய வாய்மொழி சாட்சியம் மூலமாகவும், சான்றாவணங்கள் மூலமாகவும் வாதிகள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதாலும், வாதிகளின் வழக்கை பிரதிவாதிகள் மறுக்காத நிலையில் வழக்கின் அனுமானம் வாதிகளுக்கு சாதகமானது என்றே இந்நீதிமன்றம் கருதி வாதிகள் கோருகின்ற பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா 1முதல் 4க்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**<u>13. எழுவினா 5ற்கான தீர்வு</u>**

வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அனுமதிக்கப்பட்டுள்ளதால், இதர பரிகாரங்கள் வாதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று எழுவினா5ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**14.** முடிவாக, தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்தும், தாவா சொத்தின் சுவாதீனத்தை 8,9 பிரதிவாதிகள் இரண்டு மாதகாலத்திற்குள் வாதிகள் வசம் ஒப்படைக்க உத்தரவிட்டும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு

07.07.1976ம் தேதி எழுதிக் கொடுத்த கிரையஆவணம் செல்லத்தகக்தல்ல என விளம்புகை செய்தும், 3 முதல் 6 பிரதிவாதிகள் 7ம் பிரதிவாதிக்கு 15.09.1981ம் தேதியிட்டு எழுதிக் கொடுத்த கிரையஆவணம் செல்லத்தகக்தல்ல என விளம்புகை செய்தும், 2 மற்றும் 7 பிரதிவாதிகள், 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு 10.07.2009ம் தேதியிட்டு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் 5வது லக்க சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள 5ம் லக்க சொத்தை பொறுத்து செல்லத்தகக்தல்ல என விளம்புகை செய்தும் தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு அவரவர் செலவுத்தொகைளை அவரவர்களே ஏற்றுக் கொள்ளவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

**15.** இறுதியாக, இவ்வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு நவம்பர் திங்கள் 29ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**Sd./ திருமதி.M.முருகானந்தி**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வேடசந்தூர்.**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

**வா.சா.1.** சின்னம்மாள்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | -- | நில உடைமை குறிப்பேடு | அசல் |
| வா.சா.ஆ.2 | -- | 1389 ஆண்டு பசலிக்கான அடங்கல் கணக்கு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 08.03.2004 | பொன்னம்பலத்தின் இறப்பு சான்று | அசல் |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.4 | -- | வாரிசு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.5 | 13.09.2012 | வில்லங்க சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.6 | 05.09.2012 | வில்லங்க சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.7 | 07.07.1976 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 15.09.1981 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | 10.07.2009 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.10 | -- | கணிணி சிட்டா | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.11 | -- | சர்வே எண்.370 க்கான புலப்படம் | நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** இல்லை

**Sd./ திருமதி.M.முருகானந்தி**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வேடசந்தூர்.**